

# கொரோனா ஆத்திச்சூடி


## முனைவர் ஆ.இராஜேஸ்வரி

உதவிப்பேராசிரியர், கலைத்திட்ட வரைவு மதிப்பீட்டுத்துறை

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை - 97




அணிந்திடுவோம் முகக்கவசம்
கரோனாவை விரட்டிடுவோம்.



ஆனந்த வாழ்விற்கு
தூய்மை போற்றுவோம்.




இடைவெளியை பின்பற்றி
நம்மையும் சமூகத்தையும் காப்போம்.




ஈவது ஆனாலும்
எட்டியே நிற்போம்.



உண்மையை உறவுகளிடம்
எடுத்துரைப்போம்.



ஊக்கத்தினை ஒருபோதும்
கைவிடோம்



எளிய இயற்கை உணவை
உண்போம்.



ஏற்புடைய உடற்பயிற்சியினை
பழகுவோம்.



ஐயம் தவிர்த்து
ஆரோக்கியம் பேணுவோம்.




ஒருமித்த கருத்துடன்
அரசு அறிவுரையேற்போம்.



ஓட்டிடுவோம் கொரோனா,
வென்றிடுவோம் கொரோனா,



ஔவியமென்ற விலைமதிப்பில்லா பொக்கிசம்
நம் கரங்களில் என்பதனை உணர்ந்திடுவோம்